முற்பகல் 11–10

6. அறிவிப்பு

கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2005-2006, மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2005–2006 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியங்களுக்கான கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Article 205 read with clause 3 of Article 203 of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly, the demands for further grants for the year 2005-2006".

7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2005–2006 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2005–2006 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 23–09–2005 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2005–2006 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 489, திரு. கோ. இரவிராஜ்.*

திரு. கோ. இரவிராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றக் கட்டட வளாகத்தில் துணைச் செயலாளர்களுக்குப்*